செய்தி வெளியீடு எண்.832 நாள்.3.10.2008

## ஏழை எளிய ஆதிதிராவிட மக்களுக்காகப் பாடுபட்டு நோபல் பரிசுக்கு இணையான சுவீடன் நாட்டு விருது பெற்றுள்ள கிருஷ்ணம்மாள்–சங்கரலிங்கம் ஜெகந்நாதன் தம்பதியருக்கு முதலமைச்சர் கலைஞர் பாராட்டு

நோபல் பரிசுக்கு இணையாக, ஸ்வீடன் நாடு வழங்கும் இந்த ஆண்டுக்கான 'வாழ்வுரிமை விருது' தமிழகத்தைச் சேர்ந்த நாகை மாவட்டத்தைச் சேர்ந்த கிருஷ்ணம்மாள்–சங்கரலிங்கம் ஜெகந்நாதன் தம்பதியருக்கு வழங்கப்படுகிறது எனும் செவியினிக்கும் செய்திகேட்டு, நெஞ்சம் மகிழ்ந்து நிறைந்த மனதோடு தம்பதியர் இருவரையும் வாழ்த்துவதாக முதலமைச்சர் கலைஞர் அறிவித்துள்ளார்.

திருமதி கிருஷ்ணம்மாள் – ஏழை தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த குடும்பத்தில் பிறந்து பல்கலைக் கழகம்வரை பயின்று, காந்தியடிகளின் சர்வோதய இயக்கத்தில் ஈடுபட்டவர். சங்கரலிங்கம் ஜெகந்நாதன் ஒத்துழையாமை இயக்கத்தில் சேர்ந்து, கல்லூரிப் படிப்பை கைவிட்டு முழுநேர காந்தீயத் தொண்டராகத் திகழ்ந்தவர். தொண்டால் இணைந்த இருவரும் நாடு சுதந்திரம் பெற்ற பின்னர்தான் திருமணம் என முடிவு செய்து, அதன்படி 1950இல் திருமணம் செய்து கொண்டவர்கள்.

1953 முதல் 1967 வரை இருவரும் வினோபா பாவே அவர்களால் தோற்றுவிக்கப்பட்ட பூதான இயக்கத்தில் முழுமையாக ஈடுபட்டு சிறப்பான பங்காற்றியுள்ளனர்.

கீழவெண்மணி சம்பவத்திற்குப் பிறகு அங்கு வாழ்ந்த ஆதிதிராவிட மக்களுக்கு குடியிருப்பு மனை கிடைக்காத சூழ்நிலையில், திரு.சங்கரலிங்கம் ஜெகந்நாதன் அவர்கள் திருவாரூரிலும், தனியார் ஆதிக்கத்தில் இருந்த வலிவலம் கோவில் நிலம் ஏழை எளியவர்க்கு கிடைக்க வேண்டுமென்பதற்காக அங்கும் உண்ணாவிரதம் இருந்ததைத் தொடர்ந்து அப்பிரச்சினைகளில் அவர்களுக்கு உதவிய நிகழ்வையும், முந்தைய அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் தேங்கிக் கிடந்த கோப்புகளில் ஒன்றாக இருந்த கிருஷ்ணம்மாள் – சங்கரலிங்கம் ஜெகந்நாதன் ஆகியோரது அமைப்பு சார்பில் வைக்கப்பட்டிருந்த கோரிக்கையினை ஏற்று, ஏழை ஆதிதிராவிடர்களுக்கு வழங்கப்படக்கூடிய 1014 ஏக்கர் நிலங்களுக்கு பதிவுக் கட்டணத்தில் இருந்து விலக்களித்து ஆணையிட்ட நிகழ்வையும் இவ்வேளையில் நினைவுகூர்கிறேன்.

ஏழை எளியவர்களுக்காகவே பணியாற்றிக் கொண்டிருக்கும் இந்த தம்பதியர் இருவருடைய தியாகத் தொண்டுகளைப் பாராட்டி பல்வேறு அமைப்புகள் ஏற்கனவே பரிசுகளையும், விருதுகளையும் வழங்கியுள்ள நிலையில் தற்போது சுவீடன் நாடு நோபல் பரிசுக்கு இணையான 'வாழ்வுரிமை விருதினை' இவ்விருவருக்கும் வழங்கிப் பெருமைப்படுத்தியுள்ளது.

அண்ணல் காந்தியடிகளின் அடிச்சுவட்டில் ஏழை எளிய ஆதிதிராவிட வகுப்பைச் சார்ந்த மக்களுக்காகக் கடந்த 60 ஆண்டுகளாகத் தொண்டாற்றி விருது பெற்றுப் புகழ் குவித்துள்ள பெருமக்கள் திருமதி கிருஷ்ணம்மாள்–திரு.சங்கரலிங்கம் ஜெகந்நாதன் தம்பதியர் இருவருக்கும் தமிழக அரசின் சார்பில் மனமார்ந்த பாராட்டுகளையும், நல்வாழ்த்துகளையும் தெரிவிப்பதாக முதலமைச்சர் கலைஞர் அறிவித்துள்ளார்.

* * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9